# நிலாவின் நண்பர்கள்

நிலா.........., அம்மா.... கூப்ட்டிங்களா? எங்க போற? அம்மா.. நான் விளையாடப் போறேன். நா ரெண்டு மணி நேரம் படிச்சேன். இப்போ என் நண்பர்களோட விளையாடப் போறேன், என்று நிலா மான் போல துள்ளிக் குதித்துத் தோட்டத்திற்கு ஓடினாள். நாயும் பூனையும் கோழியுமே நிலாவின் நண்பர்களாகும்.



நிலாவைப் பார்த்ததும் அவளுடைய குட்டி நாய் நிலாவின் அருகே வந்தது. நிலா தனது நாயை ராமு என்று செல்லமாய் அழைப்பாள். நிலா ராமுவின் தலையை அன்போடு வருடினாள்.

பின் கிண்ணத்தில் கொண்டு வந்த பாலை பூனைக்குக் கொடுத்தாள். கோழியைக் கூண்டிலிருந்து விடுவித்தாள். கோழி தன் குஞ்சுகளுடன் சுதந்திரமாய் இரை தேடச் சென்றது. நிலா, கோழிக்கு நெல் மணிகளைத் தூவினாள். கோழி நெல்மணிகளைக் கொத்தித் தின்றது.

நிலா ஓடும் போது அவளைப் பின் தொடர்ந்து நாயும், பூனையும், கோழியும் சென்றன. ஒருவர் பின் ஒருவராக மாறி மாறி விளையாடினர். இவ்வாறு நிலாவின் மாலைப்பொழுது நண்பர்களுடன் கழிந்தது.

## வினாக்கள்

1. நிலாவின் நண்பர்கள் யார்?

2. நிலா தனது நாய்க்கு வைத்த பெயர் என்ன?

3. உங்களுக்கும் நிலாவைப் போல் நண்பர்கள் உண்டா?

## நிரப்புக

1. நிலா பூனைக்கு ______________ வைத்தாள்.

2. கோழி நெல்மணிகளைக் ______________ தின்றது.

## வண்ணமிடுக





*கண்மணிகளே*! நீங்களும் நிலாவைப் போல் விலங்குகளிடம் அன்பாய் இருப்பிர்களா?